**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.</u>**

**<u>(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)</u>**

**சி.சி. எண் : 59/2017**

**அ.சா : 6**

| | | |
|---|---|---|
| பெயர் | : | **ஸ்ரீநாத்** |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | **பெரியசாமி** |
| ஊர் | : | **பண்ணந்தூர்** |
| வட்டம் | : | |
| ஆதார் எண் | : | |
| தொழில் | : | **டிரைவர்** |
| மதம் | : | |
| வயது | : | 43 |

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள். 21.11.2023**

**எதிரி ஆஜர்.**

**<u>முதல் விசாரணை</u>**

**தற்போது பண்ணந்தூரில் வசித்து டிரைவராக வேலைசெய்து வருகிறேன். விபத்தில் இறந்து போன சின்னப்பையனை தெரியும். அ.சா.1 ஐ தெரியாது. சுமார் 6 வருடங்களுக்கு முன்பு நான் வீட்டில் இருந்து ரோடு அருகே வந்த போது சின்னப்பையனுக்கு இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள். நான் சென்று பார்த்தபோது தலையில் காயம் ஏற்பட்டு இருந்தது. இறந்து போன சின்னப்பையன் வாய்பேச முடியாதவர். விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. சம்பவம் கேள்விபட்டுதான் சம்பவ இடம் சென்றேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.**

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதிகேட்டு குறுக்கு விசாரணை அனுமதிக்கப்பட்டது.)**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**சம்பவம் நடைபெற்றபோது இறந்து போன சின்னபையன் டி.வி.எஸ் எக்சல் வாகனத்தில் வந்தார் என்றால் சரிதான். விபத்து நடைபேற்றது பண்ணந்தூர் அஞ்சல் அலுவலகம் அருகே என்றால் சரிதான். சின்னபையன் டி.வி.எஸ் எக்சல் வாகனத்தில்**

வரும்போது ஆஜர் எதிரி எதிரே யமகா இருசக்கர வாகனத்தை அஜாக்கிரதையாகவும், அதிவேகமாகவும், ஓட்டிவந்து மோதி விபத்து ஏற்பட்டதாகவும், அதை நான் நேரில் பார்த்ததாகவும், போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. ஆஜர் எதிரி சம்பவத்தின் போது பண்ணந்தூரில் உள்ள அவரது பாட்டி வீட்டில் குடியிருந்து வந்தார் என்றால் சரிதான். ஆஜர் எதிரி எனது உறவினர் கிடையாது. சம்பவத்திற்கு பிறகு அடிப்பட்ட சின்னபையனை மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். அவர் 2 நாட்கள் கழிக்து இறந்து விட்டதாக கேள்விப்பட்டேன். ஆஜர் எதிரியை காப்பாற்ற நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இறந்து போன சின்னப்பையனுக்கு காது கேட்காது, வாய் பேசமுடியாது என்று சொன்னால் அவரால் வாய்பேச முடியாது ஆனால் காது கேட்குமா என்றால் எனக்கு தெரியாது.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

S V SHANMUGANATHAN
District Munsif cum Judicial Magistrate
Digitally signed by S V SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.

**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.</u>**

**<u>(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)</u>**

**சி.சி. எண் : 59/2017**

**அ.சா : 7**

| | | |
|---|---|---|
| பெயர் | : | **மணிவண்ணன்** |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | **முனிராஜ்** |
| ஊர் | : | **பண்ணந்தூர்** |
| வட்டம் | : | |
| ஆதார் எண் | : | |
| தொழில் | : | **கூலி** |
| மதம் | : | |
| வயது | : | 51 |

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள். 21.11.2023**

**எதிரி ஆஜர்.**

**<u>முதல் விசாரணை</u>**

**நான் தற்போது பண்ணந்தூரில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். இறந்து போன சின்னப்பையனை தெரியும், எனது வீடு பண்ணந்தூர் அஞ்சல் அலுவலகத்திற்கு பின்னால் உள்ளது. அஞ்சல் அலுவலகம் எனது அண்ணனுக்கு சொந்தமான இடத்தில் உள்ளது. அஞ்சல் அலுவலக கட்டிடத்தை நான் பராமரித்து வருகிறேன். சுமார் 6 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் காலை 09.00 மணியளவில் நான் வீட்டில் சாப்பிட்டு கொண்டிருந்தபோது திடீரென சத்தம் கேட்டது. நான் ரோட்டிற்கு சென்று பார்த்தபோது மக்கள் கூட்டமாக இருந்தது. அப்போது அங்கு சின்னபையன் தலையில் அடிப்பட்டு கீழே கிடந்தார். அவர் சைகை மூலமாக குடிப்பதற்கு தண்ணீர் கேட்டார். அவர் வாய் பேச முடியாதவர். தண்ணீர் கொடுத்துவிட்டு அவரை அருகில் உள்ள பண்ணந்தூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். அங்கு முதல் உதவி செய்து விட்டு தருமபுரி மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்துசென்றார்கள். பின்னர் சிகிச்சை பலன் இன்றி இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன். விபத்து எவ்வாறு நடைபெற்றது என்று நான் பார்க்கவில்லை. சின்னப்பையன் எக்சல் வாகனத்தில் வந்த போது விபத்து**

ஏற்பட்டுள்ளது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதிகேட்டு குறுக்கு விசாரணை அனுமதிக்கப்பட்டது.)**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

ஆஜர் எதிரியை தெரியும். அவர் பண்ணந்தூரில் பாட்டியுடன் வசித்துவந்தார். சின்னபையன் டி.வி.எஸ் எக்சல் வாகனத்தில் வரும்போது ஆஜர் எதிரி எதிரே யமகா இருசக்கர வாகனத்தை அஜாக்கிரதையாகவும், அதிவேகமாகவும், ஓட்டிவந்து மோதி விபத்து ஏற்பட்டதாகவும், அதை நான் நேரில் பார்த்ததாகவும், போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரிதரப்பு குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.